<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

**M.C.O.P.No.2/2017**

2022 ம் ஆண்டு ஜீன் மாதம் 14 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | விஷ்ணுகுமார் | வயது. | 36 |
| த.பெ. | ராஜன் | தொழில் | |
| முகவரி. | 5/1751, சௌராஷ்ட்டிரா புரம், மதுரை | | |

<u>ம.சா.1, முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது முதல் விசாரணைக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, மாதிரி வரைபடம் நகல் ம.சா.ஆ.2, பார்வை மகஜர் நகல் ம.சா.ஆ.3, விபத்துக்கு காரணமான ஒரு அசோக் லைலேண்ட் அரசு பேருந்து அதன் பதிவு எண் TN 38 N 2650 ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.4, டிஸ்சார்ஸ் சம்மரி (எண்ணிக்கை 2) அசல் ம.சா.ஆ.5, காயச்சான்றிதழ் நகல் ம.சா.ஆ.6, மருந்து பில்கள் (எண்ணிக்கை 115) ம.சா.ஆ.7, வாகனத்தை தனித்து இயக்க இயலாது என்பதற்காக Hannah Joseph மருத்துவமனையால் வழங்கப்பட்ட குறிப்புரை சான்றிதழ் ஜெராக்ஸ் ம.சா.ஆ.8, மனுதாரரின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.9, மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் ம.சா.ஆ.10, நான் பணிபுரிந்த Mankind Life Star Pharma Private Limited 01.04.2015 முதல் 30.09.2015 வரை எனக்கு கொடுக்கப்பட்ட சம்பள சான்றிதழ் (எண்ணிக்கை 6) ம.சா.ஆ.11.

<u>குறுக்கு விசாரணை</u>

மனுவில் சாட்சியம் அளிப்பதற்காக மதுரையில் இருந்து வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய ஆதார் அட்டை முகவரி மதுரை தான் என்றால் சரிதான். எனக்கு நிரந்தர மற்றும் தற்காலிக முகவரி அவிநாசியில் இல்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படும்போது நான் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. ஹெல்மெட்

அணிந்திருந்தேன். வாகனத்தை என்னுடன் வேலை செய்பவர் தான் ஓட்டினார். அவர் தன் விருப்பப்படி தான் வாகனத்தை ஓட்டினார். வாகனத்தை இயக்கியவர் பின்னால் வரும் வாகனத்தை கவணிக்காமல் இடதிலிருந்து வலது புறமாக சாலையில் திரும்பியதால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். போக்குவரத்து விதிகளை பின்பற்றி இருசக்கர வாகனத்தை இயக்கி இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டியிருக்காது என்றால் சரிதான். அரசு பேருந்தை இயக்கிய ஓட்டுநர் முறையாக வாகனம் ஓட்டக்கூடியவர் என்றால் சரியல்ல. அவர் வாகனத்தை மிதமான வேகத்தில் முறையாக இயக்கினார் என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டியவரின் தவறால் தான் விபத்து நடந்ததால் எனக்கு இழப்பீடு கோருவதற்கு எந்த முகந்தாரம் இல்லை. மனுவில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- விஷ்ணுகுமார்

Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2022.06.15 09:49:28 +0530

Subordinate Judge,
Avinashi.